சுருக்கம்

பகுதி–II திட்டம் - 2008-09 - கன்னிமாரா பொது நூலகத்திற்கு மையப்படுத்தப்பட்ட குளிர்சாதன வசதி அமைத்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வி (கே2) துறை

அரசாணை (1டி) எண்.194 நாள்:22.5.2008

படிக்கப்பட்டவை

பொது நூலக இயக்குநரின் கடித ந.க.எண்.16035/இ1/2007, நாள்.26.11.2007.

-------

ஆணை:

கன்னிமாரா பொது நூலகம், 1954-ஆம் ஆண்டு நூல்கள் விநியோகச் சட்டத்தின்படி இந்தியாவில் பிரசுரமாகும் நூல்கள் மற்றும் பருவ இதழ்களில் ஒரு பிரதியை இலவசமாகப் பெறும் தேசிய நூல் சேமிப்பு மையமாக செயல்பட்டுவருகிறது. இந்நூலகத்திற்கு நாளுக்கு நாள் வாசகர்களின் வருகை பெருகிக்கொண்டே வருகிறது. வாசகர்களின் தேவையினை பூர்த்திசெய்யவும் மற்றும் நூல்களைப் பராமரிக்கவும் அதிகளவு இடவசதி தேவைப்படுகிறது. எனவே, இதனை கருத்தில் கொண்டு 1974, ஆம் ஆண்டில் சுமார் 50,000 சதுர அடியில் மூன்று தளங்களைக் கொண்ட புதிய கட்டடம் கட்டப்பட்டது. லட்சத்திற்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. இந்நூலகத்தை நாள் தோறும் சுமாராக 2,000 வாசகர்கள் பயன்படுத்திவருகின்றனர்.

2) மேலும் கன்னிமாரா பொது நூலக நூற்றாண்டு விழா நினைவாக மூன்று தளங்களைக் கொண்ட இணைப்புக் கட்டடம் 21,823 சதுர அடியில் கட்டப்பட்டது. இவ்விரு கட்டடங்களிலும் சுமார் 6 லட்சத்திற்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. இந்நூலகத்தை நாள் தோறும் சுமாராக 2,000 வாசகர்கள் பயன்படுத்திவருகின்றனர்.

3) இக்கட்டடத்தில் உள்ள நூல்களை தூசி மற்றும் பூச்சிகள் மூலம் ஏற்படும் சேதத்திலிருந்து பாதுகாக்கவும், இந்நூலகத்திற்கு வருகைபுரியும் வாசகர்கள் நூலகத்தில் அதிகநேரம் செலவிட்டுப் பயன்பெறவும், நூலகக் கட்டடத்தினை மையப்படுத்தப்பட்ட குளிர்சாதன வசதி செய்வது மிகவும் அவசியமாகும் என்றும், மேலும் மையப்படுத்தப்பட்ட குளிர்சாதன வசதி செய்வதன் மூலம் புத்தகங்களை நீண்ட காலம் பாதுகாக்க இயலும் என்றும், இதற்கு ரூ.20,00,000/- (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) தொடராச் செலவினம் ஆகும் எனவும் பொது நூலக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4) மேற்கண்ட பொது நூலக இயக்குநரின் கருத்துரு 2008-09-ஆம் ஆண்டு பகுதி–II திட்டத்தின் கீழ் பரிசீலிக்கப்பட்டு, நிதி நிலைக் குழுவால் ரூ.20,00,000/- (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) தொடராச் செலவினமாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

5) நிதி நிலைக் குழு அளித்துள்ள ஒப்புதலுக்கிணங்க, 2008-2009 பகுதி – II திட்டத்தின்கீழ் கன்னிமாரா பொது நூலகத்திற்கு மையப்படுத்தப்பட்ட குளிர் சாதன வசதி அமைத்திட ரூ.20,00,000/- (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) தொடராச் செலவினமாக, ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

6) இதற்கான செலவினம், பின்வரும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படும்:-

2205 00 கலையும் பண்பாடும் 105 பொது நூலகங்கள் **I -** திட்டத்தில் சேராதது **AB** கன்னிமாரா பொது நூலகம் 19 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல் (த.தொ.கு.எண்.2205 00 105 **AB** 1915)

7) இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.22760/கல்வி.II/2008, நாள்.10.4.2008-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம.குற்றாலிங்கம்,
அரசு செயலாளர்.

பெறுநர்
பொது நூலக இயக்குநர், சென்னை – 2
கன்னிமாரா பொது நூலக இயக்குநர்,
கன்னிமாரா பொது நூலகம், சென்னை – 8
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை – 18/35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (தெ), சென்னை- 35.
நிதித் (கல்வி – **II** ) (**BG II**) துறை, சென்னை - 9.
<u>நகல்</u>
பள்ளிக் கல்வித் (வரவு-செலவு) துறை, சென்னை - 9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.